(7) அரசினர் தீர்மானம்.

பேரவை அலுவல் வரிசையில் மாற்றம்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, சட்டப் பேரவை 21 (3) விதியின் கீழ்—

"இன்றைய நிகழ்ச்சி நிரலில் குறிப்பிட்டுள்ள 'அரசினர் சட்ட முன்வடிவுகள்' என்ற தலைப்பின் கீழுள்ள இனம் (4) 'தமிழ் நாடு 1975 ஆம் ஆண்டு ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றிய குழுக்கள் (பதவிக்கால நீட்டிப்பு) சட்ட முன்வடிவு' என்பது இனம் (3)-க்கு முன்பாக எடுத்துக்கொள்ளப்படவேண்டும்"
என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

(3) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(ஒ) தமிழ் நாடு 1975 ஆம் ஆண்டு ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (பதவிக்கால நீட்டிப்பு) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே,

"தமிழ் நாடு 1975 ஆம் ஆண்டு ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (பதவிக்கால நீட்டிப்பு) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்து, அச் சட்ட முன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"
என்று முன்மொழிகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, இந்த மசோதாவை நான் மிக வன்மையாக எதிர்க்கிறேன். காரணம் என்னவென்றால், இந்த மசோதா கொண்டு வருவதற்குப் பல்வேறு காரணங்கள் கூறப்பட்டு இருக்கிறது. குறிப்பாக, பஞ்சாயத்து வார்டுகள் பிரிவினை செய்வதற்குப் போதிய நேரம் கிடைக்கவில்லை என்ற

* 18—10—1975-ம் தேதிய தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.